**திருமிகு ஆர். கோபால்நாதன்**
அவர்களுக்கு,
சுங்கத்துறை ஆட்சியர்,
சுங்க இல்லம், சென்னை – 1



**வணக்கம்!**

திரையதால் குவியும் செல்வம்,
தீர்வை செய்யும் தலைவன்;
வரையெனக் கண்டு நாங்கள்,
வளமுடன் சேரும் பூமி!
கரையிலா வெள்ளம் போலே,
கனிவினால் அன்பைச் செய்யும்,
கரவிலா மனத்தின் அன்னல்;
களிப்புடன் என்றும் வாழி!

உரமிக்கத் தலைவர் கொண்ட
உறவினில் மாற்றம் இன்று!
வரங்காட்டும் வள்ளல் போலே,
வகையினால் நன்மை செய்வார்!
மரங்கூட வருந்திப் போகும்;
மாற்றலைக் கேட்கும் காலை!
கரங்கோத்துச் சிரிக்கும் அந்தத்
தமிழுக்கும் காய்ச்சல் தானோ!

உறவினில் எங்கள் தலைவன்;
உரிமையில் எங்கள் அண்ணன்!
மறக்கவே எண்ணா மாண்பை;
மனத்தில் நிலைக்கச் செய்தே,
அறமெனக் கொற்றம் காக்கும்;
ஆற்றலில் மிக்கார் அன்றோ!
சிறக்கவோர் தமிழைச் சூடும்,
சீர்மைதான் என்ன சொல்வேன்!



அகமதில் குழையும் அன்பை,
முகமது நிறைந்துக் காட்டும்!
அகமிதில் நாங்கள் கண்ட
அரும்பெரும் இன்பம் என்னே!
செகமிதில் காணா அன்பைச்
சிந்திய வள்ளல் வாழி!
முகஸ்துதிச் சொல்வேன் அல்லேன்;
முழுமையாய்ப் பெற்ற இன்பம்!

பிணியென நாங்கள் போக,
பிரியமே மருந்தாய் ஆகும்!
பணியிடை நேரம் காட்டிப்
பரிவுடன் நன்மை செய்யும்!
அணியென அன்பால் எம்மை,
அருகினில் அழைத்தே பேசும்!
இனியந்தச் சுகத்தை யாரோ,
இன்பமாய்க் காணப் புகுவார்!

இனியொருக் காலை யானும்;
இம்மண்ணில் காண நேர்ந்தால்,
இணையில்லா இன்பம் கொள்வேன்!
இயற்றமிழ் வார்த்தை அல்ல;
கனியெனத் தமிழைக் கண்ட,
காதலால் கூறும் வார்த்தை!
மனையகம் மட்டும் தானே,
மாற்றம் கண்ட தின்று!

"பிரிவோம் சந்திப்போம்"



சென்னை – 1
21-04-1992

அன்புடன்,
-- கு.ப. அசோகன்